**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4621

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.10.2021

Accepted: 05.12.2021

Published: 01.01.2022

Citation:
Priya. S., and A. Ligoriya. "Musical Passages Found in Classical Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 29–37.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4621

*Corresponding Author:
ligoriyasaga@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Musical Passages Found in Classical Literature

**S. Priya**
*Tamil Department, Government Arts College*
*C. Mutlur, Chidambaram, Tamil Nadu, India*

**A. Ligoriya**
*Research Scholar, Department of Tamil Studies*
*Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0001-9583-7169*

**Abstract -** Music is a very soft and subtle sound that cools the ears and soothes the soul. Ancient scholars have concluded that Tamil is a musical and musical drama. Music raises a wide variety of melodies from its instruments and instruments by the magnificence of the people. The classification system is still not found in any other language. Although there is no one who does not know the nature and differences of music in general and does not like music in general. Thiruvalluvar has concocted the idea that music and musical instruments existed among the Tamils even before the Sangam literature, even though the Sangam literature is a testament to the spread of music in Tamil. One of the great epics of Sangam literature, Tolkappiyam, Silappathikaram also contains many stories about Tamil music. The music now spreads from the educated to the palmer. Thus this article suggests that the place of music in literature is enormous.

**Keywords:** Tamil Music, Songs of Music, Seven Musical Notes, Musical Feeling, Music Books, Musical Peace

## References

1. Venkatasamy, NM. 1972. *Nattar*, Article Collection, Chennai, Nattar Pathipagam.
2. Desikan, PS. 1990. *Kambaramayanam*, Chennai, Ganga Book Center.
3. Puliyurkesikan. 1999. *Silappathikaram*, Chennai, Arivudamai Puthagam.
4. Kalaivani, R. 2005. *Sanga Ilakiyathil Esai*, Chennai, Ezhisai Pathipagam.
5. Elampooranar Urai, 2010. Tholkapiyam, Chennai, Saratha Pathipagam.

# செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் இசைப்பகுதிகள்

*ச. பிரியா*
*தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி , சி.முட்லூர், சிதம்பரம்*

*அ. விகோரியா*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்

***ஆய்வுச் சுருக்கம்***
*இசை என்பது மென்மையும், நுண்மையும் வாய்ந்து செவிப்புலனைக் குளிர்வித்து உள்ளத்தைக் கனிவிக்கும் இனிய ஓசையேயாகும். தமிழை இயல், இசை, நாடகம் என முத்திறமாக்கினர் பண்டைச் சான்றோர். மக்கள் தம் நுண்ணறிவு மாட்சியால், பற்பல வகையாகிய இன்னிசைகளைத் தம்மிடற்றிலிருந்தும், கருவிகளிலிருந்தும் எழுப்புகின்றனர். இசையின் இயல்புகளையும், வேறுபாடுகளையும் சிறப்பாக அறியாவிடினும், பொதுவகையில் இசையை விரும்பாதவர் யாரும் இல்லை. முத்தமிழில் ஒன்றான இசைக் கலை தமிழர்களிடம் எங்ஙனம் பரவியிருந்தது என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்றாக இருந்தாலும், இசையும் இசைக்கருவிகளும் தமிழர்களிடம் இருந்துள்ளன என்பதைத் திருக்குறளில் அணிநயங்களோடு திருவள்ளுவர் புனைந்துள்ளார். சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலும் தமிழிசைப் பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இலக்கியங்களில் இசைப் பெற்றிருக்கும் இடம் மகத்தானது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிசை, இசைப் பாடல்கள், ஏழிசை, இசையுணர்ச்சி, இசை நூல்கள், இசையமைதி*

## முன்னுரை

இசை என்பது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அழகு ஒலியாகும். இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும், உயிரினங்களையும் இசைய வைக்கின்ற பணிய வைக்கின்ற அருஞ்சாதனம் இசை. இசையைச் சிரவணக் கலை என்றும் அழைப்பர். இவ்விசை மென்மையும், நுண்மையும் வாய்ந்து, செவிப் புலனைக் குளிர்வித்து, உள்ளத்தைக் கனிவிக்கும் இனிய ஓசையாகும். தும்பி, வண்டு, குயில், கிளி, பூவை முதலிய உயிர்களிடத்து இவ்வினிய இசை இயற்கையாகவே அமைந்து இன்பம் செய்கின்றது. இறைவன் இசையானவன் என்பதை ஏழிசையாய் இசைப்பயனாய் என்று சுந்தரரும், எம்மிறை நல்வீணை வாசிக்குமே என்று அப்பரும் சிறப்பிக்கின்றனர். கலைகளுக்கெல்லாம் தெய்வமாகிய நாமகள் கையில் வீணையை அமைத்துள்ள முன்னோர்கள் இசைக் கலையை சிறந்ததாகப் போற்றியுள்ளனர். தமிழ் மொழியானது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பெரும் பிரிவுடையது. சங்க காலத்தில், முத்தமிழுக்கும் இலக்கண, இலக்கியங்கள் இருந்தன. ஆசிரியர் அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்பது முத்தமிழ் இலக்கணமே. தலைச்சங்கப் புலவர்கள் இயற்றிய பெருநாரை, பெருங்குருகு என்பனவும், நாரதர் இயற்றிய பஞ்ச பாரதீயம், அகத்தியர் மாணக்கராகிய சிகண்டி இயற்றிய இசை நுணுக்கம் முதலாயினவும் பழைய

இசைத்தமிழ் நூல்களாகும். ஏழிசைகளுக்குக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் தமிழ்ப் பெயர்கள் வழங்கப்பட்டன. இசைப்பாட்டுகள் எல்லாம் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. வரி, உரு முதலியவற்றில் பல வகைகள் உண்டு. கீர்த்தனைகள் என்று கூறப்படுவன உருக்களில் அடங்குவனவாகும். பல வகையான கூத்துகளோடும் வரிப்பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்து வகைகளும், அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. சான்றாக மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாந்திடிப்பதும் பாட்டு, உழத்தியர் நாற்று நடுவதும் பாட்டு, களை பறிப்பதும் பாட்டு என எல்லாச் செயல்களும் பாட்டுகளோடு நிகழ்ந்தன. முற்காலத்தில் தமிழகத்திலிருந்த ஆடவரும், மகளிரும், இசையும், கூத்தும் ஆகிய இன்ப விளையாட்டுக்களால் களி சிறந்து, உடம்பும், உள்ளமும் தளிர்த் திருந்தனர். அம்மானை, பந்து, ஊசல், வள்ளை என்னும் வரிப் பாட்டுக்களைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது.

### தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில் தமிழிசை பற்றிய குறிப்புகள் உள்ளன. பழந்தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைக்கும் நூல் தொல்காப்பியம். இசைத்தமிழ், தொடர்பான செய்திகளை இந்நூல் ஆங்காங்குக் கூறுகிறது. தமிழிசை பற்றிய நூல்களில், இன்று கிடைக்கப் பெறுகின்ற தொன்மையான நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியர் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவினது என்பது அறிஞர்கள் கருத்து. இந்நூலின் காலக் கணிப்பு தமிழர் இசையின் தொன்மையை உறுதிப்படுத்தும். இருவகை இசை, இசைக் கருவிகள் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஒன்று தொழிலிசை, மற்றையது இன்ப இசை. தொழிலிசைக் கருவி பறை என்றும், இன்ப இசைக் கருவி யாழ் என்றும் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய தொழிலிசை, இன்ப இசை பற்றியும் குறிப்பிடுகிறது.

### இசை பற்றிய குறிப்புகள்

**அசையும் சீரும் இசையொடு சேர்த்தி**
**வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே**
**இசைப்பு இசையாகும்**

இசைப்பு என்பது யாழ் போன்ற இசைக் கருவிகளை இசைத்தல் ஆகும் என்பது இந்நூற்பாவின் பொருள்.

**அளபு இறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்**
**உள என மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்**

இசையொடு பொருந்திய யாழ் நூலில் இசையிலே எழுத்து ஒலிகள் அளவுகடந்து ஒலித்தலும், ஒற்றுக்கள் நீண்டு ஒலித்தலும் உண்டு என்று அறிஞர் கூறுவர் என்பது இதன் பொருள்.

இசையைத் தொழிலாக கொண்ட மக்கள் உபயோகப்படுத்தும் இசைக் கருவிக்குப் பறை என்றும், இன்பமாக பொழுது போக்கும் மக்கள் பயன்படுத்தும் இசைக்கருவி யாழ் என்றும் தொல்காப்பியத்தில் இருவகை இசைக்கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் 18 ஆம் நூற்பா தமிழர் வாழ்க்கை நெறியின் அடிப்படைப் பண்பாட்டுக் கருவூலங்களைக் குறிப்பிடுகிறது.

**தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**

இங்கு தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள். ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ். மற்றொன்று பறை.

## தொல்காப்பியம் கூறும் யாழ்

தொல்காப்பியம் கூறும் "யாழ்" என்னும் சொல் பழந்தமிழர் வகுத்த பண்ணிசையைக் குறிக்கும். இது மிடற்றிசை (குரலிசை), நரம்புக் கருவியிசை (யாழ் என்னும் தந்திக் கருவி இசை) காற்றுக் கருவியிசை (குழல் கருவியிசை) ஆகியவற்றின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும். பண்வகைகளை "யாழின் பகுதி" எனவும் இசை நூலை "நரம்பின் மறை" எனவும் தொல்காப்பியர் குறித்துள்ளார். இதனால், பண்டைநாளில், நரம்புக் கருவியாகிய யாழினை அடிப்படையாகக் கொண்டே பண்களும் அவற்றின் திறங்களும் ஆராய்ந்து வகைப்படுத்தப்பட்டன.

## தொல்காப்பியம் கூறும் பறை

தொல்காப்பியர் கூறும் "பறை" என்னும் சொல் தாளம் பற்றியதாகும். அதாவது தாளத்தைக் கொட்டிக் கொடுக்கும் பல்வேறு தாளக்கருவிகளின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும். ஐந்து திணைக்குரிய பண்களும், அதற்குரிய காலமும் நிலத்தை ஐந்தாக வகுத்துக்கொண்ட தமிழர் அந்தந்த நிலத்துக்குரிய இசையை உருவாக்கினர். தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக்கும் உரிய தொழில் இசையையும், இன்ப இசையையும் தெளிவாக வகுத்துள்ளார். பண் இசைப்பதற்குரிய பொழுதையும் வரையறை செய்துள்ளார்.

**குறிஞ்சி குறிஞ்சிப்பண் குறிஞ்சி யாழ் வெறியாட்டுப் பறை,**
**தொண்டகப் பறை சேயோன் என்னும் முருகன் யாமம் அல்லது நள்ளிரவு**
**முல்லை முல்லைப்பண் முல்லையாழ் ஏறுகோட்பறை மாயோன் என்ற திருமால் மாலை**
**மருதம் மருதப்பண் மருத யாழ் நெல்லரி, மணமுழவு வேந்தன் என்ற இந்திரன் விடியல்**
**நெய்தல் செவ்வழிப் பண் விளரி,**
**யாழ் மீன் கோட் பறை வருணன் ஏற்பாடு**
**பாலை பாலைப்பண் பாலை யாழ் துடி கொற்றவை நண்பகல்**

இசை என்ற சொல் தொல்காப்பியத்தில் 24 இடங்களில் வந்துள்ளது. இவை அனைத்தும் இசைக் கலையுடன் ஒருவகையில் தொடர்பு உள்ளதாகவே அமைந்துள்ளன. தொல்காப்பியர் குறிப்பிடும் பாட்டு, வண்ணம் ஆகிய சொற்கள் இசையோடு தொடர்புடைய ஆழ்ந்த பொருள் பொதிந்த சொற்களாக அமைந்துள்ளன. தொல்காப்பியர் வண்ணத்தை 20 வகையாகப் பிரித்துப் பெயர்களைச் சுட்டி நூற்பா இயற்றியுள்ளார். இவ்வண்ணங்களை வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம் என இசைத்தன்மையை உயர்த்தும் வகையில் அமைத்துள்ளார். தொல்காப்பியர், பாடல்களை அவற்றின் அமைப்பு, கருத்து மற்றும் இசைத்தன்மையைக் கொண்டு பாகுபாடு செய்துள்ளார். கலிப்பாவும், பரிபாடலும் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தன. பரிபாட்டு என்பது இசைப்பா எனப் பேராசிரியர் குறிப்பிடுகிறார். பிசியைப் போன்ற இயல்புடையதாகப் பண்ணத்தி என்னும் இசைப்பாடல் இருப்பதைத் தொல்காப்பியத்தின் வழி அறியலாம். ஊடல் தீர்க்கும் வாயில்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் பாணன், கூத்தன், பாடினி, விறலி ஆகியோர் இசையிலும் கூத்திலும் திறமை உடையவர்கள் என்பதைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக

அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் பறை, யாழ் என்பன வருகின்றன. ஆகவே, இன்றைப் பறையே தமிழரின் ஆதியிசைக் கருவியென்பதும் உறுதியாகிறது. இந்தப் பறையோடும் யாழும் ஆதி இசைக் கருவியே. அத்தோடு குழலும் சேர்கிறது. இதிலிருந்து தமிழிசை தனித்துவ மரபுகளோடு மட்டுமன்றி மரபு சார்ந்த இசை கருவிகளோடும் உருவானது என்பது உறுதியாகிறது. பண்டையத் தமிழ் இசை நூல்களில் இசைக்கருவிகள் பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பறை எனப்படும் தோற்கருவியும், வங்கியம் அல்லது குழல் எனப்படும் துளைக்கருவிகளும், யாழ் எனப்படும் நரம்புக்கருவிகளும், மண் வெண்கலத்தால் செய்யப்படும் கஞ்சக் கருவிகள் என்பன 2000 ஆண்டுகட்கு முன்னரே அறியப்பெற்று அவற்றுக்கு இலக்கணம் எழுதப்பட்டிருக்கிறது. உலக இசை வரலாற்றில் தமிழ் இசையே தொன்மையான சிறந்த இசை இலக்கணப் பண்பாடுகளுடன் கூடிய இசையாகத் திகழ்ந்தது என்பதற்கு ஆதாரமாகப் இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. மத்தளம், யாழ், குழல் ஆகிய மூன்றையும் சங்கக் காலத்தில் இசைக் கருவிகளாகக் கொண்டிருந்தார்கள். யாழ் என்னும் இசைக்கருவி பண்டையக் காலத்தில் தமிழ் மண்ணில் வழங்கி வந்தது. அது உலக இசைக் கருவியாக இருந்தது. உலக நாகரிகங்களுக்கெல்லாம் முன்னோடியாய்த் திகழ்ந்த சிந்துவெளி நாகரிகத்தைப் புலப்படுத்தும் மொகஞ்சதாராவிலும் அரப்பாவிலும் தமிழர் கண்ட யாழ் இருந்ததை அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள முத்திரைகள் மூலம் அறிய முடிகின்றது.

### திருக்குறள்

திருக்குறளைப் படிப்பதற்கு, காண்பதற்கு, கேட்பதற்கு, உய்துணர்வதற்கு இப்பிறவி போதாது, இப்பிறவியில் இவை அனைத்தும் செய்வதற்கு என்ன தவம் செய்ததோ இந்த மானிட குலம். தமிழ் மக்களின் கலை, இலக்கியம் என்பது திருவள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்தே மிகச் சிறப்பாக விளங்கியதை அவரது குறட்பாக்கள் தெரிவிக்கின்றன. முத்தமிழில் ஒன்றான இசைக்கலை தமிழர்களிடம் எங்ஙனம் பரவியிருந்தது என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்றாக இருந்தாலும், அதற்கு முன்னரே இசையும் இசைக் கருவிகளும் தமிழர்களிடம் இருந்துள்ளன என்பதை திருக்குறளில் அணிநயங்களோடு திருவள்ளுவர் புனைந்துள்ளார்.

**அட்டவணை 1 . நிலம், இசைத்த பண், இசைத்த யாழ், பறை, தெய்வம், மற்றும் சிறுபொழுது**

| நிலம் | இசைத்த பண் | இசைத்த யாழ் | முழக்கிய பறை | தெய்வம் | சிறுபொழுது |
|---|---|---|---|---|---|
| குறிஞ்சி திணை | குறிஞ்சி பண் | குறிஞ்சி யாழ் | வெறியாட்டு பறை தொண்டகப் பறை | சேயோன் முருகன் | யாமம் அல்லது நள்ளிரவு |
| முல்லை திணை | முல்லை பண் | முல்லை யாழ் | ஏறுகோட் பறை | மாயோன் என்ற திருமால் | மாலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மருதம் திணை | மருதப்பண் | மருத யாழ் | நெல்லரி மணமுழவு | வேந்தன் என்ற இந்திரன் | விடியல் |
| நெய்தல் திணை | செவ்வழிப் பண் | நெய்தல் யாழ் | மீன் கோட் பறை | வருணன் | ஏற்பாடு |
| பாலை திணை | பாலைப் பண் | பாலை யாழ் | துடி | கொற்றவை | நண்பகல் |

நிலம், இசைத்த பண், இசைத்த யாழ், பறை, தெய்வம். மற்றும் சிறுபொழுது (அட்டவணை 1) போன்ற இசைக் குறிப்புகள் திருக்குறளில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடதக்கது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**

**(குறள்: 231)**

இக்குறளின் பொருளானது வறியவருக்கு வழங்க வேண்டும். அதனால் புகழ் உண்டாக வேண்டும். அதைவிடச் சிறந்த பயன் உயிருக்கு இல்லை.

**சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார்**
**கழல் யாப்பு காரிகை நீர்த்து.**

**(குறள்: 777)**

இக்குறளின் பொருளானது பரந்து நிற்கும் புகழை விரும்பி உயிர் வாழ்வையும் விரும்பாத வீரர், வீரக்கழலைக் காலில் கட்டிக்கொள்ளுதல் அழகு செய்யும் தன்மையுடையதாகும். இவ்விரண்டு குறட்களிலும் இசை எனும் சொல் வந்திருப்பினும், புகழ் என்றும் பெருமை என்றுமே பொருள் கொள்ளப்படுகின்றது. திருவள்ளுவர் புகழ் மற்றும் பெருமை போன்ற சொற்களை இசையுடன் உவமைப்படுத்தி கூறியுள்ளார்.

**பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்**

**(குறள்: 573)**

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அதேபோன்று பண்ணிற்கு அணிகலம் பாடல்.

வள்ளுவர் இசை நுணுக்கங்களையும் பற்றிக் கூறுகிறதைக் குறள்களில் அறிகிறோம்.

**சீர் இடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.**

**(குறள்: 821)**

இக்குறளின் பொருளானது, அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும் என்று தனது உரையில் கூறுகிறார் மு.வ. பட்டடை என்றால் ஏழு சுரங்களில் ஏதாவது ஒரு சுரமும் அதற்கு மேல் வரும் ஐந்தாவது சுரம் இளி (ப) சுரமும் கொண்டுள்ள உறவு ஆகும்.

தமிழிசையும் தமிழிசைக் கருவிகளும் மனித வாழ்வில் ஒன்றற கலந்திருப்பதை வள்ளுவர் சுட்டியுள்ளார்.

**குழலினி தியாழினி தென்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்.**

**(குறள்: 66)**

இக்குறள்களின் பொருளானது, தம் மக்களின் மழலைப் பேச்சைக் கேளாதவர்களே குழல் ஓசை இனியது, யாழ் இசை இனியது என்று கூறுவர்.

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**

**(குறள்: 279)**

இக்குறளின் பொருளானது, அம்பு நேர் தோற்றம் உடையதாயினும் கொடியது. யாழின் கொம்பு வளைவாகத் தோன்றினாலும் கேடற்றது. அதுபோல் மக்களின் பண்புகளையும் செயல்வகையால் அறியலாம். இவ்விரு (66279) பாடல்களிலும் முறையே துளைக்கருவியாகிய குழலும், நரம்புக் கருவியாகிய யாழும் உணர்த்தப்படுகின்றன. இவ்விரு பாடல்களாலும் இருவகை கருவிகளின் இன்பத்தையும் யாழிசை இன்பத்தையும் வள்ளுவனார் துய்த்து இன்புற்றார் என்று கூறுதல் பொருத்தமாகும். பண்டைய நாகரிகங்கள் எல்லாவற்றிலும் யாழ் மற்றும் குழல் என்ற இசைக்கருவிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன.

***அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட***
***மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.***

***(குறள்: 1076)***

தாம்கேட்ட இரகசியமானசெய்திகளைத் தாங்கிச் சென்று, அவற்றைப் பிறருக்குக் கூறும் கயவர், அறையப்படும் பறையினை ஒப்பர். பிறரிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்ன செய்தியைப் பலருக்கும் ஒருவன் தெரிவிப்பதைக் கயவன் என்று குறள் கூறுகிறது. பறை, ஒருவன் கையால் தன்னை அறிவித்த ஒன்றினை இடந்தோறும் கொண்டு சென்று அறிவிக்கும். இக்குறட்ப்பாவில் பறை என்னும் தோற்கருவியையும் அதை இசைக்கும் தொழிலினையும் உணர்த்தியுள்ளார். இப்பறை என்னும் தோற்கருவி அரங்கிசைக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் பறை இசைப்போர் பாடி மகிழும் பாடல்களுக்கு ஏற்றவகையில் முழக்கப்பெறும். ஓர் அழகிய பெண்ணை அவளுடைய அழகை ஆடவன் வருணிக்கும்போது அதில் மிகையே மிகுந்திருக்கும்.

***அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு***
***நல்ல படாஅ பறை***

***(குறள்: 1115)***

தன் மென்மை கருதாது, அனிச்சப்பூவின் காம்புகளை நீக்காது சூடினாள் நங்கை ஒருத்தி. அதன் பாரம் தாங்காமல் இடை முறிந்தால் அப்போது சாப்பறை ஒலிக்கப்படுமே என்று உரையில் கூறுகிறார் பரிமேலழகர். பறை எனும் தோல்கருவியில் கண் என்பது ‘இம்’ மென ஒலி தரும் பகுதியாகும். இதையடுத்து, தலைவனுடைய இயல்பை மறைக்க வேண்டுமென்று தோழிக்கு ஒரு தலைவி கூறுவதாக கண்விதுப்பழிதல் எனும் 118ஆம் அதிகாரத்தில் அமைந்துள்ளது இக்குறள்.

***மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்***
***அறைபறை கண்ணா ரகத்து.***

***(குறள்: 1180)***

பறையறிவிப்பது போல் துயரத்தை வெளியிடும் கண்களை உடைய எம்போன்றவரிடமிருந்து மறை செயலையும் ஊரார் அறிவது எளிது என்று பொருள்படுகிறது இக்குறள். பழங்காலத்தில் பறை, அறிவிப்புக்குத் தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவி என்பதை உணர்த்துகிறது குறள். பறை மற்ற தோற்கருவிகளைப் போன்று தோலால் போர்த்தப்பட்டது. பறையை அடித்து அதாவது பறையறைந்து செய்திகளை கொண்டு சேர்க்க, போர் அறிவிப்புச் செய்ய மற்றும் இசைப்பாட்டிற்குப் பக்க இசைக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பறை பல வகைப்படுகின்றது, அவை, அரிப்பறை, கணப்பறை, கோட்பறை, சிறுபறை, பெரும்பறை, ஒருகட்பறை, மும்முகப்பறை, தொண்டகப்பறை, நாழிகைப்பறை என்று அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்தில் முழுமையான பழமையான வளமையான இசைநூல் அடங்கியுள்ளது. முப்பது காதைகளில் ஏழு காதைகள் இசைப்பாடல்களின் வகையால் பெயர் பெற்றன. இவற்றோடு இசை இலக்கணச் செய்திகள், இசைக்குறிப்புகள், இசைக் கருவிகளின் பெயர்கள், தாளக் குறிப்புகள் இடம் பெற்றுள்ள காதைகள் மொத்தம் பதினாறு காதைகளாகும். அக்காலத்திலே பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என நால்வகை யாழ்கள் இருந்தன. பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை, தடாரி முதலிய முப்பத்தொரு வகைத் தோற்கருவிகள் வாசிக்கப்பட்டன. ஆயிரம் நரம்புடைய ஆதியாழ் இருந்ததென்றும், ஆதியிசை பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்று (11,991) என்றால் வியப்படைவதில் ஆச்சிரியமில்லை. பழந்தமிழ் நூல்கள் அவற்றின் உண்மையைத் தெரிவிக்கின்றன. சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடல், கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ் வரி, குன்றக் குரவை, வாழ்த்துக் காதை என்னும் ஏழு காதைகளும் இசைப்பாக்களின் தொகுதியேயாகும்.

**பவள வுலக்கை கையாற் பற்றித்**
**தவள முத்தங் குறுவாள் செங்கண்**
**தவள முத்தங் குறுவாள் செங்கண்**
**குவளை யல்ல கொடிய கொடிய**

மற்றொரு பாடலான,

**பொன்னிலங்குபூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட**
**மின்னிலங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணுந்**
**தென்னன் வாழ்க வாழ்க வென்று சென்றுபந் தடித்துமே**
**தேவரார மார்பன் வாழ்க வென்றுபந் தடித்துமே**

என்பன முறையே கானல் வரியிலும், வாழ்த்துக் காதையிலும் உள்ளன.

**கம்பராமாயணம்**

இராமன் வனம் புகுவான் என்ற சொல்லைக் கேட்ட அளவில் அயோத்தி மாநகரம் எய்திய துயரத்தைக் கம்பர் வருணித்துள்ளார்.

**ஆவும் அழுத, அதன் கன்றழுத, அன்றலர்ந்த**
**பூவும் அழுத, புனற் புள்ளழுத கள்ளொழுகும்**
**காவும் அழுத களிறு அழுத கால் வயப்போர்**
**மாவும் அழுதன அம்மன்னவனை மானவே**

அவலச்சுவை இவற்றில் ததும்புகிறது.

**செல்லுஞ்சொல்வல்லானெதிர்தம்பியும், தெவ்வர் சொல்லும்**
**சொல்லுஞ் சுமந்தேன், இருதோள் எனச்சூம்பி யோங்கும்**
**கல்லுஞ் சுமந்தேன், கணைப்புட் டிலும் கட்டமைந்த**
**வில்லும் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டு என்னை யென்றான்**

சீற்றம் தணியமாறு கூறிய இராமருக்கு எதிராக எனது சீற்றத்தால் என்ன பயன் என்று இலக்குமணன் கூறும் மாற்றத்திலும், அவனது கோப உணர்ச்சி பொங்கித் ததும்புதலைக் காணமுடிகிறது. சுந்தர மூர்த்திகள் பரவை நாச்சியாரைக் கண்டதனைத் தெரிவிக்கும் பாடல்:

**கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்றன் பெருவாழ்வோ,**
**பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து**
**விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ**
**அற்புதமோ, சிவனருளோ, அறியேனென் றதிசயித்தார்**

இப்பாடலில் உவகை, சிருங்கார, உணர்ச்சிகளைக் காணலாம்.

## முடிவுரை

பழங்காலத்தில் இசையின் பயனை மக்கள் அறிந்திருந்தனர். அதனை தம் வாழ்வில் ஒரு கூறாகவே போற்றிக் காத்தனர் என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்கட்கும் வெவ்வேறு வகையான யாழ் அல்லது பண் உண்டு என்று குறிப்பிடப்படுவதால், எவ்வகைக் குடிமக்களும் இசையுணர்ச்சி உடையராய் இருந்தனர் என்பது தொல்காப்பியம் அறிப்பிடும் செய்தியாகும். வள்ளுவர் உணர்த்திய பண்ணும், பாடற்றொழிலும், இசைக்கருவிகளும் தமிழின் வளத்தை, இசைத் தமிழின் வளத்தைப் பெருக்குவனவாகவே உள்ளன. தமிழ் மக்கள் இசையின் சிறப்பினை அறிந்திருந்தனர் என்றும், திருவள்ளுவரும் இசை அறிஞராக இருந்திருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது.

## குறிப்புகள்

1. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (1972). *கட்டுரைத்திரட்டு.* சென்னை, நாட்டார் பதிப்பகம்.
2. தேசிகன், பி.எஸ். (1990). *கம்பராமாயணம்.* சென்னை, கங்கை புத்தக நிலையம்.
3. புலியூர்க்கேசிகன். (1999). *சிலப்பதிகாரம்.* சென்னை, அறிவுடைமைப் புத்தகம்.
4. கலைவாணி. இரா. (2005). *சங்க இலக்கியத்தில் இசை,* சென்னை, ஏழிசைப் பதிப்பகம்.
5. இளம்பூரணார் உரை. (2010). *தொல்காப்பியம்.* சென்னை, சாரதா பதிப்பகம்.